# கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆத்தூர்.

முன்னிலை : **திருமதி. D. ஜான்சிராணி, MBA., LLM.,**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆத்தூர்.**

2025–ஆம் ஆண்டு, நவம்பர் திங்கள், 24–ஆம் நாள், திங்கட்கிழமை

**I.A. No. 10 of 2025 in O.S. No. 346 of 2011**
**(CNR No. TNSA13-000168-2011)**

1. சஞ்சீவி
2. ஜெகராஜ்
3. ராஜா
4. வெள்ளையன்
5. அமுதன் (இறந்தவர்)
6. சின்னதம்பி (எ) ஆறுமுகம்
7. சுபா
8. ராஜலட்சுமி
9. அமலா
10. சூர்யா
11. மைனர் சண்முகப்பிரியா .. மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

எதிராக

சன்னாசி .. எதிர்மனுதாரர் / வாதி

*.. 2 ...*

இம்மனுவின் மீதான விசாரணையானது, இன்று இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக வந்தபொழுது, மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. P. சிவராஜன் அவர்களும், எதிர்மனுதாரர் / வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. R. ஆறுமுகம் அவர்களும் ஆஜராகியும், இரு தரப்பு வாதம் மற்றும் ஆவணங்கள் பரிசீலனை செய்து இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

## உத்தரவுரை

மனுதாரர்கள் / பிரதிவாதிகள் இம்மனுவை, காலதாமதமாக இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை ஏற்று தாவாவில் தங்களது தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய அனுமதிவேண்டி தாக்கல் செய்துள்ளனர்.

2. **மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தின் சுருக்கம் :**

எதிர்மனுதாரர் / வாதிக்கும், தாவா சொத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்பதை நிரூபிக்க வருவாய்துறை ஆவணங்களான பசலி 1422 முதல் 1428 வரையிலான பசலிக்கான அடங்கல், தாவா சொத்திற்கான கணினி சிட்டா ஆகிய ஆவணங்கள் தற்பொழுதுதான் வருவாய்துறையிலிருந்து கிடைக்கப்பெற்றதாகவும், மேற்படி ஆவணங்கள் இவ்வழக்கிற்கு இன்றியமையாத ஆவணங்கள் என்றும், எனவே, காலதாமதமாக தாக்கல் செய்துள்ள மேற்படி ஆவணங்களை ஏற்றுக்கொள்ள வேண்டியது அவசியம் என்றும் கூறியுள்ளனர்.

3. **எதிர்மனுதாரர் / வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்:** மனுவில் சொல்லியுள்ள சங்கதிகளை இந்த எதிர்மனுதாரர் மறுத்துள்ளார். மேலும், தாவா சொத்து எதிர்மனுதாரருக்கு கடந்த 31.10.2011

.. 3 ...

தேதியிட்ட கிரயப்பத்திரத்தின் மூலம் கிடைக்கப்பெற்று அதற்கான பட்டா, சிட்டா, அடங்கல் மற்றும் மேற்படி சொத்திற்குண்டான உரிமை ஆவணங்கள் ஆகியவற்றை பெற்று கடந்த 2011–ல் வழக்கு தாக்கல் செய்து இந்த எதிர்மனுதாரர் / வாதி சாட்சியமளித்துள்ளார் என்றும், வழக்கு நிலுவையில் இருக்கும்பொழுது இவ்வழக்கிற்கு சம்பந்தமில்லாத ஒரு கோவிந்தராஜ் என்பவர் பெயரில் போலியாக அடங்கல்களின் சான்றிட்ட நகல்களை பெற்று இந்நீதிமன்றத்தில் மனுதாரர்கள் தாக்கல் செய்திருப்பது இவ்வழக்கிற்காக மனுதாரர்களால் தயாரிக்கப்பட்டது என்றும், கோவிந்தராஜ் என்பவருக்கும், இவ்வழக்கிற்கும் எவ்விதமான சம்பந்தமும் இல்லை என்றும், எனவே இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென்றும் கூறியுள்ளார்.

4. **தற்பொழுது இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்,**

*மனுதாரர்கள் / பிரதிவாதிகள் கோரியுள்ள பரிகாரம் அவர்களுக்கு கிடைக்கத்தக்கதா?*

5. இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

6. **<u>தீர்வு :</u>**

1) மனுதாரர்கள் / பிரதிவாதிகள் இம்மனுவில், எதிர்மனுதாரர் / வாதிக்கும், தாவா சொத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்பதை நிரூபிப்பதற்கான வருவாய்துறை ஆவணங்கள் தற்பொழுதுதான் வருவாய்துறையிலிருந்து கிடைக்கப்பெற்றதாகவும், மேற்படி ஆவணங்கள் இவ்வழக்கிற்கு இன்றியமையாத ஆவணங்கள் என்றும் கூறியுள்ளனர்.

*.. 4 ...*

எதிர்மனுதாரர் / வாதி தனது தரப்பு பதிலுரையில், வழக்கு நிலுவையில் இருக்கும்பொழுது இவ்வழக்கிற்கு சம்பந்தமில்லாத ஒரு கோவிந்தராஜ் என்பவர் பெயரில் போலியாக அடங்கல்களின் சான்றிட்ட நகல்களை மனுதாரர்கள் பெற்று இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பது இவ்வழக்கிற்காக மனுதாரர்களால் தயாரிக்கப்பட்டது என்றும், கோவிந்தராஜ் என்பவருக்கும், இவ்வழக்கிற்கும் எவ்விதமான சம்பந்தமும் இல்லை என்றும், எனவே இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென்றும் கூறியுள்ளார்.

2) அசல் வழக்கின் ஆவணங்களை பரிசீலனை செய்கையில், எதிர்மனுதாரர் / வாதி அசல் வழக்கை மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார். மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தங்களுடைய மனுவில், தாவா சொத்திற்கும், எதிர்மனுதாரர் / வாதிக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்பதை நிரூபிப்பதற்கான வருவாய்துறை ஆவணங்களான பசலி 1422 முதல் 1428 வரையிலான பசலிக்கான அடங்கல், தாவா சொத்திற்கான கணினி சிட்டா ஆகிய ஆவணங்கள் தற்பொழுதுதான் வருவாய்துறையிலிருந்து கிடைக்கப்பெற்றதாகவும், மேற்படி ஆவணங்கள் இவ்வழக்கிற்கு இன்றியமையாத ஆவணங்கள் என்றும் கூறியிருப்பதாலும், நீதியின் நலன் கருதியும் மேற்படி ஆவணங்களை ஏற்று இம்மனுவை இந்நீதிமன்றம் அனுமதித்து உத்தரவிடுகிறது.

7. இறுதியாக, மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள இம்மனுவை இந்நீதிமன்றம் அனுமதித்து உத்தரவிடுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவுரையானது என்னால் சுருக்கெழுத்துத்–தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் வரிவடிவில் எடுக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு

.. 5 ...

செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2025–ஆம் ஆண்டு, நவம்பர் திங்கள், 24–ம் நாள், திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

D JANSIRANI

Digitally signed by D JANSIRANI
Date: 2025.11.24 19:16:28 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**ஆத்தூர்.**

| | |
|---|---|
| <u>மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் :</u> | இல்லை |
| <u>எதிர்மனுதாரர் / வாதி தரப்பு சாட்சிகள் :</u> | இல்லை |
| <u>மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள் :</u> | இல்லை |
| <u>எதிர்மனுதாரர் / வாதி தரப்பு சான்றாவணங்கள் :</u> | இல்லை |
| <u>நீதிமன்ற சாட்சிகள் </u>: | இல்லை |
| <u>நீதிமன்ற சான்றாவணங்கள்</u> : | இல்லை |

D JANSIRANI

Digitally signed by D JANSIRANI
Date: 2025.11.24 19:16:38 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**ஆத்தூர்.**

கூ.மா.உ.நீ., ஆத்தூர்.

இ.ம.வ. எண் 10/2025

----------------

அ.வ. எண் 346/2011

அசல் / வரைவு உத்தரவுரை

நாள் : 24.11.2025